LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearc
h2024,3: 81- 89Doi.: 10.21839/lsdjmr.2024.v3.180

**Research Article**

# புறநானூற்றில் வாழ்வியல் நெறிகள்

முனைவர் க. அன்னபூரணி,

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

இம்மாகுலேட் மகளிர் கல்லூரி, கடலூர்.

Email:Poorani171274@gmail.com

ஆய்வுச்சுருக்கம்:

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் புறம் தொடர்பான போர்ச் செய்தி, அரசர்களின் வரலாறு, நாட்டுவளம், படை பலம் முதலானவை மட்டுமல்லாத வாழ்வியல் நெறிகளையும் பண்பாடுகளையும் உள்ளடக்கியதாகத் திகழ்கிறது. சங்க காலச் சமூகச் சூழலில் கல்வி ஒரு தவமாக மதித்துப் போற்றப்பெற்றது.உதவி செய்தும் மிகுந்த பொருளைக் கொடுத்தும் கல்வி கற்கவேண்டும் என ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் மேன்மையைப் போற்றிப் பாடுகிறான்.விருந்தோம்பல் என்னும் பண்பாடு, தமிழர்களின் வாழ்வியலில் ஓர் அங்கமாகத் திகழ்கிறது.இல்லறம் நாடி வந்தோரின் பசிபோக்கி மகிழ்ந்த பண்பினையும் புறுநானூற்றின் மூலம் அறியலாம்.

**கலைச்சொற்கள்:**

பேராண்மை, நாட்டுவளம், படைபலம்,நாவண்மை,நன்னடை,இல்லற வாழ்வு, விருந்தோம்பல் பண்பு, இரவலர்.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் காலக்கண்ணாடியாகவும் பாட்டுப் பெட்டகமாகவும் அமைந்து தமிழர்களின் பெருமைகளைப் பறைசாற்றி நிற்பதை அனைவரும் அறிவர். அத்தகைய சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் புறம் தொடர்பான போர்ச் செய்தி, அரசர்களின் வரலாறு, நாட்டுவளம், படை பலம் முதலானவை மட்டுமல்லாத வாழ்வியல் நெறிகளையும் பண்பாடுகளையும் உள்ளடக்கியதாகத் திகழ்கிறது. அத்தகைய வாழ்வியல் நெறிகளைக் குறித்து எடுத்துத்துரைக்கும் வகையில் இவ்ஆய்வு அமைகின்றது.

## கல்வியின் சிறப்பு

சங்க காலத்தில் கல்வியில் சிறப்பெய்தி விளங்கும் ஒருவனையே தாய் விரும்பியுள்ளாள். அது போல ஒரு குடியில் பிறந்த பலராயிலும் அரசன் அவர்களுள் அறிவுடைய ஒருவனையே தேர்ந்தெடுத்து அவன் அறிவுரைப்படியே ஒழுகுவான். கீழ்க்குலத்துப் பிறந்த ஒருவன் கல்வியறிவு நிரம்பியவனாய்த் திகழ்வானாயின் மேற்குலத்தைச் சார்ந்த ஒருவனும் கல்வியின் பொருட்டு அவனை வழிபட்டுத் தனது கல்வியறிவை வளர்த்துக் கொள்வான். மேலும் உதவிசெய்தும் மிகுந்த பொருளைக் கொடுத்தும் கல்வி கற்கவேண்டும் என ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் மேன்மையைப் (புறம். 183) போற்றிப் பாடுகிறான். பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பேராண்மையுடன் நாவன்மையும் உடையவன். அவன் பாடியது இது. தமிழகத்துள் அந்நாள் புகுந்த ஆரியப்படையினரை வென்று துரத்திய ஆண்மை பற்றி இவன் இப்பெயர் பெற்றனன்.

“உற்றுழி உதவியும்,
உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே;
கீழ்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே” (புறம். - 183)

ஒரு தாய் ஒரு வயிற்றுப் பிறந்தவருள்ளும், அவரவர் சிறப்பின் காரணமாகத் தாயும் தன் பாசத்திலே ஓரளவிற்கு வேறுபடுவளாவாள். ஒரு குடி வந்த பலருள்ளும், ‘மூத்தோனை வருக’ என்று அழையாது, அறிவுடையோனையே, ‘வருக’ என்று அரசனும் சென்று கேட்பான். வேற்றுமைப்பட்ட நால்வேறு வகையான மக்களுக்குள்ளும் கீழ் நிலையிலுள்ளான் ஒருவன் கல்வி கேள்விகளிலே வல்லான் ஆயின், மேல்நிலையிலுள்ளவனும் அவனுக்கு ஆட்படுவான். இதனால், ஊறுபாடு நேர்ந்த விடத்து உதவியும், மிக்க பொருளைக் கொடுத்தும், அதனால் நேரும் இழப்பு, வருத்தம் முதலிய நிலைகளைக் கண்டு வேறுபடாதும் முயற்சியுடன் அனைவரும் கற்று அறிவுடையவராகி மேம்படுதலே நன்றாகும். அதனால் சிறப்பும், அறிவும், நூற்பயிற்சியும் பெற்று இவ்வுலகத்து வாழ்விலும் உயரலாம்.

மக்கட்பண்பு வளர கல்வி வேண்டும் கல்வியுடையான் சிந்தனையும், செயலும் தனக்கும் பிறருக்கும் ஒருங்கே நன்மை பயப்பதாக அமைய வேண்டும். இதனையே சங்க காலச் சான்றோர் ‘நன்னடை’ என்றார்கள். நன்னடையுடைய தனிமனிதன் தன்னுடைய சிந்தனை ஆற்றலையும் கற்பனையாற்றலையும் சமுதாய நலன் கருதிப் பயன்படுத்த விரும்புவான். அதனால் எல்லா மக்களுக்கும் நன்மை உண்டாகும். இதனை ‘நன்னடை நல்கல்

வேந்தர்க்குக் கடனே' (புறம் 312) என்று அறிவுறுத்துகிறது.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;

நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே;

ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,

களிறு எறிந்து பெயர்தல் களைக்குக் கடனே" (புறம். - 312)

கல்வியறிவு பெற்ற ஒருவனது நன்னடையினால் சமூகம் பயனடையவேண்டும். அதற்குரிய சூழ்நிலையை வகுத்துத் தருவது அக்கால அரசின் கடமையாகும் எனச் சங்ககாலக் கவிஞர்கள் காவலருக்கு ஆணையிட்ட அரிய காலமாகும். சங்ககாலச் சமுதாயம் வேந்துவழி ஒழுகிய சமுதாயம் எனினும் அறிவார்ந்த பெரியோரை அமைச்சராகவும், நண்பராகவும் உறுதிச் சுற்றமாகவும் பெற்ற சமூகமாக இருந்தது. காதல், போர், வெற்றி, புகழ் எனப் பொழுது போக்கி மகிழாது இளவேனிற் காலத்துச் சொற்புதிதுண்டு மகிழும் கலை மயங்கிற் களித்தனர்.

"செறுத்த செய்யுட் செய்செந் நாவின்

வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்

இன்றுள வாயின் நன்றுமன்" (புறம். - 53)

கல்வியில் சிறந்தோர் பிறந்த இந்நாட்டிலே 'நாமும் வாழோம்' என்று போய்விடவும் கூடாது. 'பல பொருள்களையும் அடக்கிய செய்யுட்களை விரைந்து பாடும் செந்நாவும், மிக்க அறிவும், விளங்கிய புகழும் உடைய கபிலன் இன்றிருந்தால் நல்லது என்று நீ சொன்னாய்; அது நன்று. அவரில்லாததால், நின் பகைவரை வெற்றி கொண்ட சிறப்பை என்னால் இயன்றவரை யானே பாடுவேன் கேட்பாயாக! என யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் கருதியதாகப் பொருந்தி இளங்கீரன் பாடுவர். புலவர் பாடும் புகழ் என்பது சமூகம் ஏற்பளித்த ஒரு பெரும் பதிப்பாகவே அமைந்தது.

**விருந்தோம்பல் பண்பு**

ஒரு சமூகத்தின் பண்பாட்டை அறிந்துகொள்ள பல்வேறு கூறுகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒரு கூறு உணவுப் பழக்கவழக்கத்தை உள்ளடக்கிய விருந்தோம்பல் பண்பாகும். தமிழர்களின் தலையாயப் பண்புகளுள் விருந்தோம்பல் பண்பும் அடங்கும். ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இல்லறவாழ்வின் நிலைப்பேறாக விளங்குவது விருந்தோம்பலாகும். விருந்தோம்பல் புகழுக்காக செய்வதல்ல. அது அனைத்து உயிர்களின் மீதான அளவற்ற

அன்பின் அடையாளமாகத் திகழ்கின்றது.

விருந்தினரின் முகத்தில் மகிழ்ச்சியைக் காண்பதிலேதான் விருந்தளிப்பவரின் மகிழ்ச்சி அடங்கியுள்ளது. எனவேதான் விருந்தினரின் பசிபோக்கி அவர் முகத்தில் மகிழ்ச்சியைக் காணும் வகையில் பல்வேறு உணவுகளை விதவிதமாகச் சமைப்பதைக் காணமுடிகிறது. பல்வேறு வகையிலான உணவு வகைகளையும் அறியமுடிகிறது. அவற்றைத் தாங்களே சமைத்து தாங்களே உண்ணும் கயமையின்றித் தமது விருந்தினர்கள், உறவினர்கள், வறியவர்கள், புலவர்கள் போன்றோரின் பசி தீர்த்த பிறகே உண்ணும் பண்பைத் தமிழர்கள் பெற்றிருப்பதுதான் பெருஞ்சிறப்பாகும். அந்த விருந்தோம்பல் பண்பு தமிழர்களிடம் எவ்வாறு சிறப்பாக இருந்தது என்பதைப் புறநானூறு வாயிலாக இவ்வியல் எடுத்துரைக்கின்றது.

விருந்தினரை வரவேற்று உபசரித்து அமுதத்தையே வென்றுவிடும் அளவிற்குச் சுவை மிகுந்த உணவினை அளித்து மகிழ்ந்ததை,

“அமிழ்தட்டு ஆனாக் கமல்குய் அடிசில்

வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை” (புறம். 10)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

தங்களிடம் உள்ள உணவு சிறிதெனினும் அதனையும் இரவலர்க்குக் கொடுத்து மகிழ்ந்ததை,

“…………………… உள்ளது

தவச் சிறிது ஆயினும் மிகப் பலர் என்னாள்

நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்

இற்பொலி மகடூஉப் போல” (புறம். 331)

என்னும் பாடல் கூறுகிறது.

வீட்டிற்கு வந்திருந்த இரவலர்களுக்கு உணவு கொடுத்துவிட்ட நிலையில், புதிதாக வந்த இரவலர்க்கு இல்லை என்று கூறாமல், வீட்டில் இருந்த விதைநெல்லையும் எடுத்துக் குற்றி அதை உணவாக்கிக் கொடுத்து விரும்தோம்பிய பண்பை,

“வரகும் தினையும் உள்ளவை எல்லாம்

இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென

குறித்துமாறு எதிர்ப்பைப் பெறாஅ மையின்

குரல்உணக்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து

சிறிது புறப்பட்டன்றோ இலலே” (புறம். - 333)

என்ற பாடல் மூலம் காணமுடிகிறது.

தேவர்கள் உண்ணக்கூடிய அமுததே கிடைத்தாலும் அதனை இனிதெனத் தனித்துத் தாமே உண்ணாமல் அனைவருக்கும் கொடுக்கும் விருந்தோம்பும் பண்பை,

"………………………….. இந்திரர்

அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதனத்

தமியர் உண்டலும் இலரே" (புறம். – 182)

என்ற பாடல் எடுத்துரைக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக ஔவையார் அதியமான நட்பு விளங்குகிறது. இதனை,

"சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே

பெரியகட் பெறினே

யாம்பாடத் தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே" (புறம். – 235)

என்ற பாடலடிகள் கூறுகிறது. அதியன் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்கிய நிகழ்வும் இதனை ஒத்ததேயாகும்.

ஒரு பாணன் வீட்டிற்கு விருந்தினனாக வருகிறான். அவனுக்கு உணவு படைக்க எதுவும் இல்லாத காரணத்தால் தமது போர் வாளை அடகு வைத்து உணவு சமைத்துப் போடுகிறான். மறுநாளும் விருந்தினர் வர, தம்மிடம் இருந்த யாழை அடகு வைத்து விருந்து உபசரிக்கிறான். இக்கருத்தை,

"நெருறை வந்த விருந்திற்கு மற்றுத்தன்

இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றிக்

கருங்கோட்டச் சீறியாழ் பணையம் இதுகொண்டு

ஈவதிவாளன்….." (புறம். – 316) என்ற பாடலிலிருந்து அறியமுடிகிறது.

இப்படி விருந்தோம்பும் பண்பு நிகழ்வுகள் இன்னும் பல புறநானூற்றில் காணக்கிடைக்கின்றன. அவ்வளவும் விருந்தோம்பிய சிறப்பைச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளன. வறுமை வாட்டியபோதும் விருந்தோம்பலைப் புன்முறுவலோடு செய்த பாங்கு வியக்கவைக்கிறது.

**பழக்க வழக்கங்கள்**

தமிழர் வீரத்தின் விளைநிலமாகத் திகழும் புறநானூற்றில் வீரம் சார்ந்த பதிவுகள் மட்டுமல்லாது, பிற பண்பாட்டுக்கூறுகள் பற்றிய பதிவுகளும் காணப்படுகின்றன. புறநானூற்றில் பழக்கவழக்கங்கள் குறித்த பதிவுகளைப் பல நிலைகளில் காணலாம்.

சங்க இலக்கிய பழந்தமிழர்கள் போர் நிகழ்வுகளில் சில மரபு சார்ந்த பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வந்தனர். பின்நாளில் இந்தப் பழக்கவழக்கங்கள் தமிழர்கள் பின்னாளில் நன்னெறி பெறவும் காரணமாக அமைந்தன. போர்க் காலங்களில் பூச்சூடுதல், பகைநாட்டை அழித்தல், மறக்குடி மாண்பு போன்ற பழக்கவழக்கங்களைக் கையாண்டனர்.

பூச்சூடுதல்

தமிழர்கள் ஆநிரை கவர்தல் முதலான ஒவ்வொரு போர் எநிகழ்வுகளுக்கும் வெவ்வேறு விதமான பூக்களைச்சூடிப் போர் புரிந்துள்ளனர்.

“போந்தே வேம்பே ஆரென வரூஉம்

மாபெரும் தானையர் மலைந்த பூவும்’’ (புறப். வெ. - 13)

என்று தொல்காப்பியம் இயம்பும்.

பெரும்பாலாகப் பூச்சூடுதல் என்பது தத்தம் வீரர்களை அடையாளப்படுத்துவதற்கான அறிகுறியாகும். இப்பண்பு தமிழர்களின் முறைசார்ந்த போர்நெறிகளைக் குறிப்பிடுவனாவாக அமைந்துள்ளன. புறநானூறு, கௌரவர்கள் தும்பைப் பூவைச்சூடிப் பாண்டவர்களுடன் போரிட்டு இறந்ததாகக் குறிப்பிடுகிறது.

“அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ

நிலந்தலைக் கொண்ட

பொலம்பூந் தும்பை’’ (புறம். - 2)

என்ற பாடலின் வழி வீரர்கள் பூச்சூடி போரிட்ட பழக்கவழக்கங்களை அறியமுடிகிறது.

**நம்பிக்கைகள்**

பண்டைய காலம் முதல் இன்றளவுள்ள பெரும்பாலான நம்பிக்கைகள் அச்ச உணர்வின் காரணமாகத்தான் தோன்றியது. இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுது, அதற்கு மனித மனம் காரணம் கற்பிக்க முயலும்பொழுது அது நம்பிக்கையாகத் தோற்றம் பெறுகிறது. மனித மனத்தின் விளைவாகத் தோன்றும் இந்நம்பிக்கைகள் நாளடைவில் மனித வாழ்வில் இன்றியமையாத மற்றும் மனித வாழ்வினை இயக்கும் அளவிற்குப் பெரும் இடத்தினைப் பெற்றுவிடுகிறது.

**விரிச்சி கேட்டல்**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் ஒரு செயலை செய்யும் முன் பொதுஇடத்தில் கூடி நின்று வழிபாடு செய்து அமைதியாக நின்றிருப்பர். அப்போது அவ்வழியே செல்வோரின் வார்த்தைகளை நற்சொல் (அ) விரிச்சியாக கொள்வார்கள். இதனைத் தொல்காப்பியர் பாக்கத்து விரிச்சி என்பார். மேலும் நற்சொல், வாய்ச்சொல், விரிச்சி, வாய்ப்புள், பறவாப்புள் என்றும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

“வேண்டிய பொருளின் விளைவுநன்கு அறிதற்கு

ஈண்டு இருண்மாலைச்

சொல்வோர்த் தன்று” (தொல். புறத். 63)

என்ற நூற்பா வழி இதனை அறியமுடிகிறது.

தலைவனின் மார்பில் விழுப்புண் ஏற்பட்டதால், அவன் உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணிய தலைவியின் வாட்டத்தைப் போக்கும் பொருட்டு, முதுபெண்டீர் நெல்லும்

நீரும் வைத்து பொதுஇடத்தில் நின்று விரிச்சி கேட்கின்றனர். இதனை,

“நெல்நீர் எரிந்து விரிச்சி யோக்கும்

செம்முது பெண்டீன் சொல்லும் நிரம்பா'' (புறம். - 280)

என்ற மாறோகத்து நப்பச்சலையாரின் பாடல் வழி அறியமுடிகிறது.

**பேய்கள் பற்றிய நம்பிக்கைகள்**

பழந்தமிழர் இடையே பேய்கள் பற்றிய நம்பிக்கை மிகுதியாகக் காணப்பட்டது. புறநானூறும் இதனைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. போரில் புண் ஏற்பட்ட மறவனைப் பேய் தீண்டிவிடும் என்பதற்காக, அவனைப் பேய் தீண்டாவண்ணம், அவனது சுற்றத்தார்கள் சிலமுறைகளின் அடிப்படையில் காத்த நிலைதனைப் பண்டைய தமிழரிடையேக் காணலாம். இதனை தொல்காப்பியம்,

“ஏமஞ் சுற்றம் இன்றி புண்ணோன்

பேஎய் ஓம்பிய பேஎய் பக்கமும்'' (தொல். புறத். 77)

என்றும், புறப்பொருள் வெண்பாமாலை தொட்டகாஞ்சி, தொடாக்காஞ்சி, பேய்க்காஞ்சி என்ற நிலையிலும் பதிவுசெய்துள்ளன.

போர்க்களத்தில் பகைவரால் புண்பட்ட வீரன் ஒருவனை அவனது சுற்றத்தார், பேய் தீண்டாத வண்ணம் வீட்டுமுகப்பில் இரவம் மற்றும் வேம்புமரத்தின் இலைகளைச் செருகினர். பேயை விரட்டுவதற்காக யாழோடு பல வாத்தியங்களை இசைக்கச்செய்தனர். வீரனது கண்ணுக்கு மை வைத்தும் வீடுமுழுவதும் வெண்சிறுகடுகையும் தூவினர். ஆம்பல் குழலையும் ஊதினர். பேய்களை விரட்டக்கூடிய காஞ்சிப்பண்ணை இசைத்துப்பாடினர். வீட்டைப் பேய் அணுகாதபடி நறுமணம் மிக்கப் பொருள்களின் புகைகளைப் பரவச்செய்தனர். இத்தன்மையை,

“தீங்கணி இரவமொடு வேம்புமனைச் செரிஇ

வாங்குமருப்பு யாழொடு பல்இதயம் கறங்கக்

கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி'' (புறம். - 281)

என்ற அரிசில்கிழாரின் பாடலின் வழி அறியமுடிகிறது.

**நடுகல் வழிபாடு**

நடுகல் வழிபாடானது தமிழர்களின் மிகப் பழமையான நம்பிக்கை சார்ந்த வழிபாட்டு முறையாகும். போர்க்களத்தில் மிகுந்த வீரம் கொண்டு போரிட்டு இறந்த மறவனுக்கு நடப்படும் ஒரு கல் ‘நடுகல்’ ஆகும். இதற்கு ‘வீரக்கல்’ என்றும் பெயர். நடுகல் வழிபாடு பற்றிக்

“காட்சி கல்கோள் நீர்படை நடுதல்

சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல்” (தொல். புறத். 78)

என்று தொல்காப்பியம் இயம்புகிறது. இந்த வீரக்கல்லிற்கு மயிற்பீலி சூட்டியும் கள் மற்றும் மாமிசம் வைத்தும் வழிபடுவர். மேலும் இக்கல்லை வழிபாட்டால் தங்கள் குழந்தைகளுக்கு எவ்விதத் துன்பமும் ஏற்படாது என்று மக்கள் நம்பினார்கள்.

ஆநிரை கவர்ந்து வீரத்துடன் போரிட்டு இறந்த வீரனுக்கு நடுகல் நடப்பட்டது. ‘இரவலனே! நீ செல்லும் பாதை கொடியதாக இருப்பதால் இந்த வீரனனின் நடுகல்லைத் தொழுது செல்வாயானால் நீ அச்சமின்றிச் செல்லலாம்’ என்று ஒருவன் கூறுகின்ற நிலையைப் புறநானூறு,

“பெருங்களிற்று அடியின் தோன்றும் ஒருகண்

இரும்பறை இரவல! சேறி ஆயின்

தொழாதனை கழிதல் ஓம்புமதி’’ (புறம். - 263)

என்ற வழி உரைக்கிறது.

**எரிகொள்ளி வீழ்தல்**

சங்க கால மக்கள் கோள்கள் குறித்து நம்பிக்கை கொண்டிருந்தனர். வானில் தோன்றும் கோள் நிலைகளை வைத்து நன்மை, தீமைகளைக் கணித்தனர். எரிகொள்ளி வீழ்வது தீ நிமித்தமாகக் கருதப்பட்டது. எரிகொள்ளி வீழ்ந்தால் நாட்டுமக்களுக்கு அழிவு ஏற்படுவதோடு அல்லாமல், நாட்டு வளங்களும் அழிந்துவிடும் என்ற நம்பிக்கை சங்க மக்களிடையே நிலவிவந்தது.

கிள்ளிவளவனது பகைநாட்டில் எரிகொள்ளி விழுந்ததைக் கண்ட கோவூர் கிழார் ‘நின் பகைவர் முற்றிலும் அழிவர்’ என்று கூறுவதை,

“திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்...

…எரிநிகழ்ந் தன்ன செலவின்

செருமிகு வளவ! நின் சினைஇயோர் நாடே’’ (புறம். - 41)

என்ற பாடல் மூலம் எரிகொள்ளி விழுவதால் நாடு அழிவுறும் என்ற நம்பிக்கை நிலவியதை அறியமுடிகிறது.

**வடமீன் தோன்றுதல்**

வடக்கில் தோன்றுவதால் இக்கோளுக்கு வடமீன் என்று பெயர். இக்கோள் தீப்பரக்க கீழே விழுந்தால் அந்நாட்டு மன்னருக்கு அழிவு ஏற்படும் என்று நம்பிக்கைக் கொண்டிருந்தனர். யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை நாட்டில் வடமீன் விழுந்தது. அன்றிலிருந்து ஏழாம் நாள் அவன் இறந்துபட்டான். இதனை,

“தலைநாள் மீன் நிலை திரிய,

நிலைநாள் மீன் அதன்எதிர் ஏர்தரத்

தொல்நாள் மீன் துறைபடியப்

பாசிச் செல்லாது, ஊசி முன்னாது

அளக்கர்த்திணை விளக்கமாகக்

கனைஎரி பரப்பக் கால் எதிர்பு பொங்கி

ஒருமீன் விழுந்தன்றால், விசும்பின் னானே....

மேலோர் உலகம் எய்தினன்'' (புறம். - 229)

என்ற பாடல் உணர்த்துகிறது.

**வெள்ளிமீன் தோன்றுதல்**

வெள்ளிமீன் வடதிசையில் தோன்றினால் மழை பெய்யும் என்றும் தென்திசையில் தோன்றினால் பஞ்சம் ஏற்படும் என்றும் சங்க கால மக்கள் நம்பினார்கள். இக்கோள் விடியற்காலையில் தோன்றுவதால் 'விடிவெள்ளி' என்றும் பெயர் பெற்றது.

சிறுகுடிகிழான் பண்ணனை மதுரை அளக்கர் ஞாழர் மகனார் மள்ளனார் புகழ்ந்து பாடும் போது, அவன் நாட்டில் வெள்ளி மீன் தென்திசையில் தோன்றியதால் மழையின்றி நாடு துன்புற்றநிலையைச் சுட்டிகாட்டுகிறார்.

“வெள்ளி தென்புலத்து உறைய, விளைவயல்

பள்ளம் வாடிய பயன்இல் காலை'' (புறம். - 388)

என்று புறநானூறு கூறுகிறது.

புள்கள் பற்றிய நம்பிக்கைகள்

சங்கத் தமிழரிடையே புள்கள் பற்றிய நம்பிக்கைகள் செறிந்து தோன்றின. இதனை, தொல்காப்பியரும், 'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்' என்று உரைக்கிறார்.

“நாளன்று போகிப் புள்ளிடைத் தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று
மொழியினும்'' (புறம். - 124)

என்னும் காரியினது கொடைப்பெருமை கூறுமிடத்து புள்சகுனம் குறித்து கூறப்படுகிறது. பெரும்பாலும் புள் பறத்தல் தீச்சகுனமாகவே கருதப்படுகிறது.

**தொகுப்புரை**

சங்க காலச் சமூகச் சூழலில் கல்வி ஒரு தவமாக மதித்துப் போற்றப்பெற்றது. பல்வேறு தொழில்கள் புரிந்த புலவர்கள் பாடிய பாடல்கள் அவர்கள் பெற்றிருந்த கல்விக்கு நற்சான்றாகும். கீழ்க்குலத்துப் பிறந்த ஒருவன் கல்வியறிவு நிரம்பியனவாய்த் திகழ்வானாயின் மேற்குலத்தைச் சார்ந்த ஒருவனும் கல்வியின் பொருட்டு அவனை வழிபட்டு தனது கல்வியறிவை வளர்த்துக்கொள்வான். மேலும் உதவி செய்தும் மிகுந்த பொருளைக் கொடுத்தும் கல்வி கற்கவேண்டும் என ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் மேன்மையைப் போற்றிப் பாடுகிறான்.

விருந்தோம்பல் என்னும் பண்பாடு, தமிழர்களின் வாழ்வியலில் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. விருந்தோம்பலுக்கு அவர்கள் பயன்படுத்திய உணவு முறைகளையும், உணவு வகைகளையும் எடுத்துரைப்பதொடு வறுமையான சூழ்நிலையிலும் விரும்தோம்பும் பண்பையும், பசியைப் பொருட்படுத்தாமல் தம்

இல்லறம் நாடி வந்தோரின் பசிபோக்கி மகிழ்ந்த பண்பினையும் புறுநானூற்றுப் பாடல் வழி அறியலாம்.

சங்க இலக்கிய பழந்தமிழர்கள் போர் நிகழ்வுகளில் சில மரபு சார்ந்த பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வந்தனர். போர்க் காலங்களில் பூச்சூடுதல், பகைநாட்டை அழித்தல், மறக்குடி மாண்பு போன்ற பழக்கவழக்கங்களைக் கையாண்டனர். சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் ஒரு செயலை செய்யும் முன் பொதுஇடத்தில் கூடி நின்று வழிபாடு செய்து அமைதியாக நின்றிருப்பர். அப்போது அவ்வழியே செல்வோரின் வார்த்தைகளை நற்சொல் (அ) விரிச்சியாக கொள்வார்கள். பழந்தமிழர் இடையே பேய்கள் பற்றிய நம்பிக்கை மிகுதியாகக் காணப்பட்டது. புறநானூறும் இதனைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. போரில் புண் ஏற்பட்ட மறவனைப் பேய் தீண்டிவிடும் என்பதற்காக, அவனைப் பேய் தீண்டாவண்ணம், அவனது சுற்றத்தார்கள் சிலமுறைகளின் அடிப்படையில் காத்த நிலைதனைப் பண்டைய தமிழரிடையேக் காணலாம்.

**துணை நூற்பட்டியல்:**


1. இளம்பூரணர்-தொல்காப்பியம் தமிழ் பல்கலைக்கழக மறு தோன்றி அச்சகம்.தஞ்சாவூர்.2008.

2. முனைவர் பாக்கியமேரி-மகிமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.2012.

3.சுப்பிரமணியன்.ந- சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.1986

4. புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.சென்னை.2004.

5. பாலசுப்பிரமணியன்.கு.வே.-சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்.மதராஸ் ரிப்பன் பிரஸ். புதுக்கோட்டை.1995.

6. சே.பழனிசாமி-புறநானூற்றில் தமிழர் பண்பாடு.

7. தட்சிணாமூர்த்தி-சங்க இலக்கியம் உணர்த்தும் மனித உறவுகள்.

8.காந்தி.கா-தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.சென்னை.1980